# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 206/ந/2025

நாள். 23 .10.2025

| | | |
|---|---|---|
| S.அன்பழகன், துறையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம் | – | முறையீட்டு மனுதாரர் |
| 1)நகராட்சி ஆணையர், முசிறி நகராட்சி, முசிறி. திருச்சிராப்பள்ளி மாவட்டம்<br>2)மாணிக்கம் த/பெ.சண்முகம், முசிறி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் | – | எதிர்மனுதாரர்கள் |

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் (அஞ்சல் மற்றும் வட்டம்), முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், எண்.155, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. அன்பழகன், என்பவரது 27.05.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.05.2025 அன்று பெறப்பட்டு, 206/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் (அஞ்சல் மற்றும் வட்டம்), முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், எண்.155, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. அன்பழகன், என்பவரது 27.05.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

“நான் எனது சொந்த வேலை காரணமாக முசிறி சென்ற போது முசிறி புதிய பேருந்து நிலையம் எதிரில் ராஜா ப்ரைம் பேக்கரிஸ் கட்டிடத்தை பார்த்து எனக்கு அதிர்ச்சியும், ஆச்சரியமும் ஏற்பட்டது. ஏனென்றால் நகராட்சி பகுதிகளில் 12 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்டிடங்கள் கட்டக்கூடாது என்கிற விதியை மீறி தரைதளம் தவிர்த்து 4 மாடி கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. அதுவும் 15 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்டப்பட்டுள்ளது. அந்த கட்டிடத்தில் பல்வேறு நிறுவனங்கள்

வாடகைக்கு செயல்படும் போது பார்க்கிங்கென்று 1 அங்குலம் கூட இடம் விடாமல் கட்டப்பட்டுள்ளது. மேலும் அந்த கட்டிடத்தை சுற்றி 4 பக்கமும் காலி இடம் ஏதும் விடாமல் கட்டி உள்ளதால் எதிர் பாராமல் ஏதாவது தீ விபத்து ஏற்பட்டால் தடுக்க முடியாத சூழ்நிலையில் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. ராஜா ப்ரைம் பேக்கரிஸ் கடைக்கு வரும் வாகனங்கள் அனைத்தும் பார்க்கிங் வசதி இல்லாத காரணத்தால் தார்சாலை வரை நிறுத்தப்படுவதால் வாகன நெரிசல் ஏற்படுவதோடு பொதுமக்களுக்கு நடப்பதற்கு சிரமமாக உள்ளது. மேற்கண்ட அனைத்து விவரங்களையும் விரிவாக விளக்கி உயர்நீதிமன்ற வழிகாட்டுதல்படி ராஜா ப்ரைம் பேக்கரிஸ் கட்டிடத்தை இடித்து அகற்றுமாறு நான் முசிறி நகராட்சி ஆணையருக்கு 22.03.2025 இல் புகார் அனுப்பி அதனை அவர் 24.03.2025–ல் பெற்று கொண்டதாக எனக்கு ஒப்புதல் சான்று வந்துள்ளது. நகராட்சி ஆணையருக்கு அனுப்பிய புகாரின் நகலை அரசு இணைச் செயலாளர், நகராட்சி நிர்வாக இயக்குனருக்கும் அனுப்பினேன்.

என் புகாரின் மீது நடவடிக்கை எடுக்குமாறு கடித எண்.1244/M.A.1/2025–1 நாள் 01.04.2025 தேதியிட்ட கடிதம் மூலம் அரசு இணைச் செயலாளர் நகராட்சி நிர்வாக இயக்குனருக்கு உத்தரவு பிறப்பித்து அதன் நகலை முசிறி நகராட்சி ஆணையருக்கும் அனுப்பினார். அரசு இணைச் செயலாளரின் மேலான உத்தரவை ஆணையர் தான் மதிக்கவில்லை என்றால் நகராட்சி நிர்வாக இயக்குனரும் மதிக்காமல் இருப்பதிலிருந்தே நகராட்சி நிர்வாகத்துறை எவ்வளவு மோசமாக இருப்பது நன்கு விளங்குகின்றது.

ஏற்கனவே நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்கள் புதிதாக கட்டிடம் கட்டும் இடங்களை எவ்வாறு ஆய்வு செய்ய வேண்டும் என்று அனுப்பிய சுற்றறிக்கையில் கூறியுள்ள அறிவுரைகளை நகரமைப்பு ஆய்வாளரும் பின்பற்றாமல் அதை கண் காணிக்க வேண்டிய நகராட்சி ஆணையரும் கடைப்பிடிக்காத காரணத்தால் தான் தற்போது 15 மீட்டர் உயரத்திற்கு மேல், பார்க்கிங் வசதி இல்லாமல் விதிமீறி ராஜா ப்ரைம் பேக்கரிஸ் கட்டிடம் செயல்பட்டு வருவதை நான் நகராட்சி ஆணையருக்கு அனுப்பிய புகாரிலேயே சுட்டி காட்டி இருந்தேன்.

மேலும் நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே மாண்புமிகு உயர்நீதிமன்றம் விதி மீறல் தொடர்பான அனைத்து வழக்குகளிலும் விதிமீறி கட்டிடம் கட்டினால் அதை இடிக்க வேண்டியது என்பது தான் சட்டம் என்றும், அதை செயல்படுத்தாத அதிகாரிகள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிளி பிள்ளைக்கு சொல்வது போல் திரும்ப திரும்ப கூறியதோடு திருச்சி அடுக்குமாடி குடியிருப்பு வழக்கில் விதி மீறிய கட்டிடத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்காத அனைத்து அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுத்துள்ளதை சுட்டி காட்டி இருந்தேன்.

மேலும் மாண்புமிகு உயர்நீதிமன்றம் வரிவிதிப்பு முறைகளை ஒழுங்காக கடைப்பிடித்தாலே பெரும்பாலான விதி மீறல் கட்டிடங்களை தடுத்து விடலாம் என்று குறிப்பிட்டதை சுட்டி காட்டியதோடு, ஸ்ரீரங்கம் கோவிலை சுற்றி விதி மீறல் கட்டிடங்களை தொடர்பான வழக்கில் மாநகராட்சி ஆணையர் உட்பட அனைத்து அதிகாரிகளையும் நீதிமன்றத்தில் நேரில் வரச்சொல்லி கடுமையாக கண்டித்ததையும் ஆணையருக்கு புகாரில் குறிப்பிட்டிருந்தேன்.

மேலும் நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே ஆணையர் அவரின் உயர் அதிகாரிகளின் அறிவுரைகளையும் பின்பற்றாததோடு, மாண்புமிகு உயர்நீதிமன்றத்திடமும் எள்முனை அளவு பயமோ கடுகளவு மரியாதையோ இல்லாமல் செயல்பட்டு 15 மீட்டர் உயரத்திற்கு

மேல் 4 மாடி கட்டிடம் கட்ட அனுமதித்ததோடு, பார்க்கிங் வசதி இல்லாமல் செயல்படும் ராஜா ப்ரைம் பேக்கரிஸ் கட்டிடத்திற்கு உடந்தையாக செயல்படுகின்றாரோ என்ற எனது சந்தேகத்தை கூறியிருந்தேன்.

விதிமீறிய ராஜா ப்ரைம் பேக்கரிஸ் கட்டிடத்திற்கு ஆணையர் உடந்தையாக செயல்படுகின்றாரோ என்ற எனது சந்தேகத்தை நான் ஆணையருக்கு அனுப்பிய புகாரில் கூறியது உண்மை என்பதை நிருபிப்பது போல் ஆணையர் இதுவரை என்புகார் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால் ஆணையர் விதிமீறிய ராஜா ப்ரைம் பேக்கரிஸ் கட்டிடத்திற்கு உடந்தை என்பது சந்தேகத்திற்கு இடமின்றி நிருபணமாகிறது.

எனவே இத்தகைய சூழ்நிலையில் குற்றவாளியும், நீதிபதியும் எப்படி ஒருவராக இருக்க முடியாதோ, அதுபோல் ஆணையர் கொடுக்கும் வாக்குமூலம், அறிக்கை அனைத்தும் ராஜா ப்ரைம் பேக்கரிஸ் கட்டிடத்திற்கு ஆதரவாக கொடுப்பார் என்று நான் கருதுவதால், இயற்கை நீதிப்படி, சத்தியத்தின் வழியில் உச்சபட்ச நேர்மை கொண்ட தாங்கள் மாண்புமிகு தங்களின் நேரடி பார்வையில் குழு அமைத்து முசிறியில் உள்ள ராஜா ப்ரைம் பேக்கரிஸ் கட்டிடத்தை இடநேராய்வு செய்து விதிமீறி செயல்படும் ராஜா ப்ரைம் பேக்கரிஸ் கட்டிடத்தை மாண்புமிகு உயர்நீதிமன்ற வழி காட்டுதல்படி இடித்து அகற்றுமாறு தாழ்மையுடன், பணிவுடன் வேண்டி விரும்பி கீழ்ப்படிந்து கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரின் புகார் குறித்து முசிறி நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 20.06.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3. முசிறி நகராட்சி ஆணையர் தனது அறிக்கையினை கடித ந.க.எண்.491/2025/எப்1, நாள் 08.07.2025–ல் கீழ்க்கண்டவாறு இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

"முசிறி நகராட்சி எல்லைக்குள் புதிய பேருந்து நிலையம் எதிரில் கதவு எண்.15/18ல் (சர்வே எண்.86/12) ராஜா ப்ரைம் பேக்கரிஸ் என்ற வணிக வளாகம் இயங்கி வருகிறது. தரைத்தளம் மற்றும் மூன்று தளங்களில் RCC கூரை கொண்ட கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. தரைத்தளத்தில் மட்டும் ஸ்வீட்ஸ் ஸ்டால் பேக்கரி கடை நடத்தப்பட்டு வருகிறது. முதல் தளம், இரண்டாம் தளம், மூன்றாம் தளம் கட்டிடங்களில் எந்தவொரு உபயோகத்திற்கும் கொண்டு வரப்படவில்லை. கட்டிடம் மட்டுமே கட்டப்பட்டுள்ளது, தரைத்தளத்தில் Hotel கட்டுவதற்கும், முதல்தளத்தில் Lodge கட்டுவதற்கும், 2014ஆம் ஆண்டில் முசிறி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கட்டிட உரிமம் எண்.80/2014–15 நாள், 19.09.2014–ல் கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன்பின்னர் 2017 ஆம் ஆண்டில் கட்டிட உரிமம் எண்.60/2017–18, நாள் 21.09.2017–ல் இரண்டாம் தளத்தில் Lodge கட்டுவதற்கு பேரூராட்சியில் அனுமதி பெறப்பட்டுள்ளது. மூன்றாம் தளத்தில் கட்டப்பட்டுள்ள 26' x 60' அளவுள்ள கட்டிடத்திற்கு கட்டிட அனுமதி பெறப்படவில்லை. அனுமதி வழங்கப்பட்டுள்ள வரைப்படங்களில் வாகனம் நிறுத்துவதற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. வளாகத்திலும் வாகனம் நிறுத்துவதற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

தரைத்தளம், முதல்தளத்தில் அனுமதி அளிக்கப்பட்ட அளவு 1560 சதுரடியில் கட்டிடம் கட்டப்பட்டிருந்தாலும், முன்பக்கத்திறவிடம் 4'6"–க்கு பதிலாக 2'–ம் பின்பக்கத்திறவிடம் 1'6''–க்கு பதிலாக 4'–ம் விடப்பட்டுள்ளது.

இரண்டாம் தளத்தில் முன்பக்கத் திறவிடம் 4'6''–க்கு பதிலாக 2' விடப்பட்டுள்ளது. பின்பக்கம் Open Terrace என குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. அனுமதிக்கப்பட்டுள்ள அளவு 1313.00 சதுரடிக்கு பதிலாக 1560.00 சதுரடி பரப்பளவில் இரண்டாம் தளம் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ள தரைத்தளம், முதல்தளம், இரண்டாம்தளம் கட்டிடங்களுக்கும் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள மூன்றாம் தளக்கட்டிடத்திற்கும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, பிரிவு 133(5), 135(1)(2)ன் கீழ் அறிவிப்புகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வரிவிதிப்பு எண்கள்.190/005/900442, 190/005/900443, 190/005/900354 ஆகிய எண்களில் சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டு சொத்துவரி செலுத்தபட்டு வருகிறது. குடிநீர் கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது.

மேற்படி கட்டுமானத்தின் மீது தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, (திருத்தப்பட்ட சட்டம் 35/2022)ன் கீழ் உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என சமர்ப்பித்துள்ளார்.

4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான முசிறி நகராட்சி ஆணையர், 2ஆம் எதிர்மனுதாரரான கட்டிட உரிமையாளர் ஆகியோரை 31.07.2025அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 15.07.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு. S.அன்பழகன் என்பவர் தனக்கு உடல்நிலை சரியில்லாததால் 31.07.2025 அன்று நடைபெறும் விசாரணையில் கலந்துகொள்ளவில்லை என தெரிவித்து தனக்கு வேறொரு தேதியில் விசாரணை நடத்திடுமாறு தனது 26.07.2025 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக்கொண்டதனைத்தொடர்ந்து மனுதாரரது கோரிக்கையினை ஏற்று மேற்படி விசாரணை 02.09.2025க்கு ஒத்திவைக்கப்பட்டது. மேற்படி விசாரணை தொடர்பாக மனுதாரருக்கும் எதிர்மனுதாரர்களுக்கும் 30.07.2025 நாளிட்ட இம்முறைமன்ற அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6) இதற்கிடையில், முசிறி நகராட்சி ஆணையரின் 28.08.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண்.491/2025/எப்1–ல் மனுதாரரின் புகார் குறித்து கூடுதல் விவரங்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

திரு.ச.மாணிக்கம் த/பெ.சண்முகம் என்பவரின் 28.07.2025 நாளிட்ட மனுவில் தான் அரசு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்களிடம் கூடுதலாக கட்டப்பட்டுள்ள தங்களது கட்டிடத்திற்கு முறைப்படி கட்டிட அனுமதி வழங்கிட ஆவனம் செய்ய

வேண்டுமாய் மனு அளித்துள்ளார் என்ற தகவலை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

7) மனுதாரர் திரு. S. அன்பழகன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் 02.09.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக கலந்து கொண்டு தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு அளித்துள்ளார். அதில்:-

"முசிறி புதிய பேருந்து நிலையம் எதிரில் அமைந்துள்ள ராஜா ப்ரைம் பேக்கரிஸ் கட்டிடம், 12 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்டிடங்கள் கட்டக்கூடாது என்கிற விதியை மீறி 15 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்டப்பட்டுள்ளது. அக்கட்டிடத்தில் பல்வேறு நிறுவனங்கள் வாடகைக்கு செயல்படும் நிலையில், பார்க்கிங் வசதி இல்லாமலும், கட்டிடத்தை சுற்றி 4 பக்கமும் காலி இடம் விடாமலும் கட்டப்பட்டுள்ளதால் எதிர்பாராமல் தீ விபத்து ஏற்பட்டால் தடுக்க முடியாத நிலையில் உள்ளது.

ராஜா ப்ரைம் பேக்கரிஸ் கடைக்கு வரும் வாகனங்கள் அனைத்தும் பார்க்கிங் வசதி இல்லாத காரணத்தால் தார்சாலைவரை நிறுத்தப்படுவதால் வாகன நெரிசல் ஏற்படுவதோடு பொதுமக்களுக்கு நடப்பதற்கு சிரமமாக உள்ளது.

மேற்படி கட்டிடத்தை நேராய்வு செய்து மாண்பமை உயர்நீதிமன்ற வழிகாட்டுதல்கள் மற்றும் அரசு விதிமுறைகளுக்கு மாறாக கட்டப்பட்டுள்ள ராஜாப்ரைம் பேக்கரிஸ் கட்டிடத்தை இடித்து அகற்றவும், இதுகுறித்து ஏற்கனவே அளிக்கப்பட்ட என் புகார் மீது நடவடிக்கை எடுக்கத் தவறிய நகராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறும் மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்'' எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

8) எதிர்மனுதாரரான முசிறி நகராட்சி ஆணையர் திரு. வே. சண்முகம் என்பவர் 02.09.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் இம்முறைமன்ற நடுவத்தின் முன்பு நேரடியாக ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"முசிறி நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள புதிய பேருந்து நிலையம் எதிரில் கதவு எண்.15/18ல் (சர்வே எண்.86/12)ல் உள்ள கட்டிடத்தில் ராஜா ப்ரைம் பேக்கரிஸ் என்ற வணிக வளாகம் இயங்கி வருகிறது. இக்கட்டிடத்திற்கு தரைத்தளம் மற்றும் மூன்று தளங்களில், RCC கூரை கொண்ட தரை தளத்தில் Hotel கட்டுவதற்கும் முதல் தளத்தில் Lodge கட்டுவதற்கும் 2014ஆம் ஆண்டில் முசிறி தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கட்டிட உரிமம் எண்.80/2014–15 நாள் 19.09.2014–ல் கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் 2017 ஆம் ஆண்டில் கட்டிட உரிமம் எண்.60/2017–18, நாள் 21.09.2017–ல் இரண்டாம் தளத்தில் Lodge கட்டுவதற்கு பேரூராட்சியில் அனுமதி பெறப்பட்டுள்ளது.

மூன்றாம் தளத்தில் கட்டப்பட்டுள்ள 26' x 60' அளவுள்ள கட்டிடத்திற்கு கட்டிட அனுமதி பெறப்படவில்லை. அனுமதி வழங்கப்பட்டுள்ள வரைப்படங்களில் வாகனம் நிறுத்துவதற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. மேலும் வளாகத்திலும் வாகனம் நிறுத்துவதற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. நான்கு பக்கமும் திறவிடங்கள் விடப்படவில்லை.

வரிவிதிப்பு எண்கள்.190/005/900442, 190/005/900443, 190/005/900354 ஆகிய எண்களில் சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டு சொத்துவரி செலுத்தபபட்டு வருகிறது. குடிநீர் கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ள தரைத்தளம், முதல்தளம், இரண்டாம்தளம் கட்டிடங்களுக்கும் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள மூன்றாம் தளக்கட்டிடத்திற்கும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 133(5), 135(1)(2)ன் கீழ் அறிவிப்புகள் அனுப்பப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற விவரம் இம்முறைமன்ற நடுவத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்'' என தெரிவித்துள்ளார்.

இரண்டாவது எதிர்மனுதாரரான ராஜா ப்ரைம் பேக்கரிஸ் நிறுவனத்தின் உரிமையாளர் திரு. S. மாணிக்கம் என்பவர் 02.09.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் இம்முறைமன்ற நடுவத்தின் முன்பு நேரடியாக ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"முசிறி நகராட்சி எல்லைக்குள் புதிய பேருந்து நிலையம் எதிரில் கதவு எண்.15/18ல் அமைந்துள்ள எங்களது கட்டிடத்தில் ராஜா ப்ரைம் பேக்கரிஸ் என்ற நிறுவனம் 2022 முதல் இயங்கி வருகின்றது. நகராட்சியின் கட்டிட அனுமதியுடன் நான்கு பக்கமும் திறவிடங்கள் விட்டு கட்டப்பட்டுள்ளது. 15 மீட்டர் உயரம் என புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், எனது கட்டிடத்தின் தற்போதைய உயரம் 12 மீட்டருக்குள் உள்ளதென தெரிவித்துக்கொள்கின்றேன். வாகனம் நிறுத்துவதற்கான இடம் ஒதுக்கீடு செய்து தர ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. மூன்றாம் தளத்திற்கான அனுமதியினை நகராட்சியிடம் முறைப்படி விண்ணப்பித்து அனுமதி பெற்றுக்கொள்கின்றோம். மேலும், நகராட்சியால் எங்கள் கட்டிடத்திற்கு வழங்கப்பட்ட நோட்டீஸ்க்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971 பிரிவு 80–A–ன் கீழ் அரசுக்கு (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) 28.07.2025 அன்று முறையீடு செய்யப்பட்ட மனு அரசால் 31.07.2025 அன்று பெறப்பட்டுள்ளது என்ற விவரத்தினை மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களுக்கு இதன்மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன்'' எனத்தெரிவித்துள்ளார்.

9) மனுதாரரின் புகார் மனு, மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் மற்றும் மனுதாரர் வாக்குமூலம், எதிர்மனுதாரரான முசிறி நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் மற்றும் 2–ஆம் எதிர்மனுதாரர் ராஜா ப்ரைம் பேக்கரிஸ் உரிமையாளர் திரு. S. மாணிக்கம் என்பவரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் பரிசீலிக்கப்பட்டதில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

திருச்சி மாவட்டம், முசிறி பேருந்து நிலையம் எதிரில் விதி மீறி கட்டப்பட்டுள்ள ராஜா ப்ரைம் பேக்கரிஸ் கட்டிடத்தை மாண்புமிகு உயர்நீதிமன்ற வழிகாட்டுதலின்படி இடித்து அகற்றுமாறு பொதுநலன் கருதி புகார் கொடுத்தும், நடவடிக்கை எடுக்காமல் விதி மீறிய கட்டிடத்திற்கு உடந்தையாக இருக்கும் முசிறி நகராட்சி ஆணையர் மீது நடவடிக்கை எடுத்து விதிமீறிய கட்டிடத்தை இடித்து அகற்றுமாறு மனுதாரர் தனது மனுவில் இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

முசிறி நகராட்சி எல்லைக்குள் புதிய பேருந்து நிலையம் எதிரில் கதவு எண்.15/18–ல் (சர்வே எண்.86/12) ராஜா ப்ரைம் பேக்கரிஸ் என்ற வணிக வளாகம் இயங்கி வருவதும், தரைத்தளம் மற்றும் மூன்று தளங்களில் RCC கூரை கொண்ட கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்பதும், தரைத்தளத்தில் மட்டும் ஸ்வீட்ஸ் ஸ்டால் பேக்கரி கடை நடத்தப்பட்டு வருவதும், முதல் தளம், இரண்டாம் தளம், மூன்றாம் தளம் கட்டிடங்களில் எந்தவொரு உபயோகத்திற்கும் கொண்டுவரப்படவில்லை என்பதும், கட்டிடம் மட்டுமே கட்டப்பட்டுள்ளதும், தரைத்தளத்தில் Hotel கட்டுவதற்கும், முதல் தளத்தில் Lodge கட்டுவதற்கும் 2014ஆம் ஆண்டில் முசிறி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கட்டிட உரிமம் எண்.80/2014–15 நாள் 19.09.2014ல் கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ளதும், அதன்பின்னர் 2017ம் ஆண்டில் கட்டிட உரிமம் எண்.60/2017–18 நாள் 21.09.2017ல் இரண்டாம் தளத்தில் Lodge கட்டுவதற்கு பேரூராட்சியில் அனுமதி பெறப்பட்டுள்ளது என்பதும், மூன்றாம் தளத்தில் கட்டப்பட்டுள்ள 26' x 60' அளவுள்ள கட்டிடத்திற்கு கட்டிட அனுமதி பெறப்படவில்லை என்பதும், அனுமதி வழங்கப்பட்டுள்ள வரைபடங்களில் வாகனம் நிறுத்துவதற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பதும், வளாகத்திலும் வாகனம் நிறுத்துவதற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பதும் முசிறி நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

முசிறி நகராட்சி எல்லைக்குள் புதிய பேருந்து நிலையம் எதிரில் கதவு எண்.15/18–ல் தங்களது கட்டிடத்தில் ராஜா ப்ரைம் பேக்கரிஸ் என்ற நிறுவனம் 2022 முதல் இயங்கி வருகிறது என்றும், நகராட்சியின் கட்டிட அனுமதியுடன் நான்கு பக்கமும் திறவிடங்கள் விட்டு கட்டப்பட்டுள்ளது எனவும், தங்களது கட்டிடத்தின் தற்போதைய உயரம் 12 மீட்டடருக்குள் உள்ளதெனவும், வாகனம் நிறுத்துவதற்கென இடம் ஒதுக்கீடு செய்து தர ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது எனவும், மூன்றாம் தளத்திற்கான அனுமதியினை நகராட்சியிடம் முறைப்படி விண்ணப்பித்து பெற்றுக்கொள்கிறோம் எனவும், மேலும் நகராட்சியால் தங்களது கட்டிடத்திற்கு வழங்கப்பட்ட நோட்டீஸுக்கு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச்சட்டம், 1971, பிரிவு 80–A-ன் கீழ் அரசுக்கு (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு) 28.07.2025 அன்று முறையீடு செய்யப்பட்ட மனு அரசால் 31.07.2025 அன்று பெறப்பட்டுள்ளது எனவும் 2–ம் எதிர்மனுதாரர் அளித்துள்ள வாக்குமூலத்தில் இருந்து அறிய முடிகிறது.

இந்நேர்வில், கட்டட வரைபட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டடத்தை அகற்றக்கோரி முசிறி நகராட்சி ஆணையரால் ராஜா ப்ரைம் பேக்கரிஸ் உரிமையாளருக்கு சார்பு செய்யப்பட்ட 08.07.2025 நாளிட்ட அறிவிப்பு ந.க.எண்.491/2025/எப்1–ஐ எதிர்த்து, 2ஆம் எதிர்மனுதாரரான ராஜா ப்ரைம் பேக்கரிஸ் உரிமையாளர் திரு.ச.மாணிக்கம் என்பவர் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச்சட்டம், பிரிவு 80Aன் கீழ் அரசுக்கு 28.07.2025 அன்று மேல்முறையீடு செய்துள்ளதாக தெரிவித்துள்ள நிலையில், அரசிடமிருந்து பெறப்படும் ஆணையின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள முசிறி நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்றம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள் 23–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

பெறுநர்

1) திரு.S.அன்பழகன்,
155, அசோக் நகர்,
முசிறி மெயின் ரோடு,
துறையூர் (அஞ்சல் வட்டம்),
திருச்சிராபள்ளி மாவட்டம் – 621 010

2) நகராட்சி ஆணையர்,
முசிறி நகராட்சி,
திருச்சிராபள்ளி மாவட்டம்.

3) திரு.மாணிக்கம்,
த/பெ.திரு.சண்முகம்,
ராஜா ப்ரைம் பேக்கரிஸ் உரிமையாளர்,
எண்.19, மாதா கோவில் தெரு,
முசிறி. திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்

இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் ✡ சென்னை–600 032 ✡